

# Amritha Varshini ©

mrithyor ma amritham gamaya - lead me from mortality to immortality




Raagam # 9 | Thaanam # 5 | Pallavi # 64

உ



# PALLAVI # 64 - Inside this issue


| TOPIC | AUTHOR | Page # |
|---|---|---|
| Editorial | Sri Anand Vasudevan | 3 |
| ஸ்ரீ மஹாபெரியவா வாக்கு | | 4 |
| **Slice of Life From - Bhagavan Sri Ramana Maharishi** | | 5 |
| நலம் தரும் நவராத்திரி | திரு ஜெயராம சர்மா | 7 |
| குருவாய் வருவாய் | ஸ்ரீமதி சாந்தா ராஜன் | 10 |
| Guruvayur - Heaven on Earth | Sri V S Krishnan | 17 |
| அஷ்டவக்கிர மணிகள் | திரு ஹரிஹர சர்மா | 22 |
| அருளாம் பொருளையே நாடி நிற்போம் | திரு ஜெயராம சர்மா | 27 |
| கிரிவலப் பாதையில் ரமணாஸ்ரமம் | திரு ஆனந்த் வாசுதேவன் | 28 |
| Veda Rakshanam - Maha Pidi Arisi Thittam | | 29 |



# EDITORIAL

**From Editors' Desk**

Namaskaram Suprabhatham / Swagatham to Amritha Varshini

We are glad to release the 64rd Edition of Amritha Varshini today on the auspicious occasion of Anusham during the glorious Navarathri Festival. This year the Navaratri has commenced on the first day of Thula Masam. Thula Masam is very special to Tamil Nadu as it brings copious rains and for the Kaveri Thula Snanam. Take a holy dip in Kaveri during this period brings lot of Punyam.

Sri Mahaperiyava has laid the foundation has sowed the seed strongly for our culture to grow. The seed of our culture lies in protecting Vedas. If Vedas are protected its branches can grow easily and our society is safe. Sri Mahaperiyava has spent his life in protection of Vedas. Even if we do our Karmanushatanam (Sandhya Vandanam, Tharpanam, Shraddham) regularly we become a beloved devotee of Sri Mahaperiyava. Let us all do our Nithya Karmanushtanam and offer our obeisance to Sri Mahaperiyava.

We have an article on Navratri by Sri Jayarama Sarma. Sri Arunagirnathar's Thiruppugazh contains Vedanta says Smt Shanta Rajan in her article Guruvai Varuvai. Sri V S Krishnan has written about the devotees of Sri Guruvayurappan which is the continuation of his earlier article Guruvayur Heaven on Earth. Sri Harihara Sarma talks about the Atma Vicharam through his Ashtavakra Manigal. There is poem on the divine grace by Sri Jayarama Sarma and a poem on Bhagavan Sri Ramana Maharishi penned by adiyen.

May this colourful festival of NAVARATRI bring SHANTI and SUBIKSHAM to all.
Kindly read, share your valuable feedback and share this Magazine to all.

Pranams



Anand Vasudevan
Dharumamigu Chennai
20th October 2020 | Anusham

anand.vasudevan1@gmail.com




நமக்கு ரொம்பப் ப்ரியம் குழந்தைகளிடம் தான். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுகிற இடத்தில் தான் என்று சொல்வது உண்டு. குழந்தைக்கு அறிவு வளராததால் காமக் க்ரோதங்கள் இல்லாமல் இருக்கிறது. அவற்றுக்கு கோபம் வரும் அழுகை வரும் உடனே இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் சிரிக்கும் விளையாடும் அழுகை கோபம் எல்லாம் வேர் ஊன்றுவது இல்லை. அடுத்த க்ஷணம் சந்தோஷமாக விளையாட ஆரம்பித்து விடும். அந்த மாதிரி இருந்து விட்டால் அது தான் உண்மையான ஞானம்.

உலகத்தில் பாவம் பண்ணாமல் இருக்கிறவன் யாராவது உண்டா என்றால் குழந்தை அல்லது பைத்தியக்காரன் தான். ஞானிகளின் உயர்ந்த நிலைக்கு உதாரணம் "பாலோன்மத்தவத்" என்று சொல்லுவார்கள். பாலன் என்றால் குழந்தை. உன்மத்தன் என்றால் பைத்தியம். உன்மாதம் என்றால் தலைக்கு மேலே ஏறிப் போகிற பித்தம். உன்மாதத்தை உடையவன் என்றால் உன்மத்தன். ஈஸ்வரனுக்கு உன்மத்த சேகரன் என்று பெயர். உன்மத்தன் என்றால் ஊமத்தம் பூ. சமஸ்கிருதத்தில் ஊமத்தைக்கு உன்மத்தம் என்று பெயர். ஊமத்தம் பூவை அவன் தரித்துக் கொண்டிருக்கிறான் அதில் சிவனுக்கு அதிகப் பிரியம்.

நாம் உலக ரீதியாக பயன் பெறுவதற்காக கடவுளிடம் பக்தி செலுத்தினால் அது பக்தியாகாது. பண்டமாற்று வியாபாரமாகும். நம்முடைய ஆன்மீக உயர்வுக்காக பக்தி செலுத்தினால் ஒரு நதி சமுத்திரத்தை அண்டும் போது அதன் ஓசையும் வேகமும் அடங்கி சாந்தப் படுவதைப் போல நாமும் சாந்தியைப் பெறுவோம். தனக்கு வெளியிலே தன்னைத் தவிர ஒன்று இருப்பதாகக் கருதி ஆனந்தத்தைத் தேடி அந்த ஒன்றிடம் பக்தி செலுத்துகிறான். தன்னையே ஒருவன் அறிந்து கொள்ளும் போது தானும் கடவுளும் வேறல்ல ஒன்று தான் என்ற உணர்வு ஏற்படும்.

வேத அத்யயனம் யோகம் த்யானம் பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்யாசம் செய்வதால் கிடைக்கும் ஈஸ்வரானுபவத்தை தெய்வீகமான சங்கீதத்தின் மூலம் நல்ல ராக தாள ஞானத்தின் மூலம் சுலபமாகப் பெற்று விடலாம். இப்படி தர்ம சாஸ்திரம் என்னும் ஸ்ருதியைத் தந்திருக்கும் யாக்ஞவல்ய மஹரிஷியே சொல்லி இருக்கிறார். வீணா கானத்தை அவர் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறார். கடுமையான பிரயாசை இல்லாமலே சங்கீதத்தால் மோக்ஷ மார்கத்தில் போய்விடலாம் என்கிறார்.



**பூரணப் பொருளான பகவான் ஸ்ரீ ரமணர் அறியாதது ஒன்றுமில்லை என்கிறார் ஸ்ரீ குஞ்சு சுவாமிகள்.**

அந்நாளில் அரிசி குறைவாக இருக்கும்போது காட்டிற்குள் போய் பல வகைக் கீரைகள் பறித்து வருவோம். கீரையை ஆய்ந்து சுத்தம் செய்யும்போதே ஸ்ரீ பகவான் ஒவ்வொரு கீரையின் குணாகுணங்களையும் எடுத்துச் சொல்வார்கள். இது உஷ்ணம், இது சீதளம், இது இன்ன வியாதிக்கு நல்லது என விளக்குவார்கள். பெரிய பாத்திரம் நிறைய ஆய்ந்து எடுத்து அவர்கள் சொல்லும் பக்குவத்தில் சமைக்கப்படும். சாப்பிடும்போது கீரையை சாப்பாடாகவும், சாதத்தை தொட்டுக் கொள்ளவுமாகச் சாப்பிடச் சொல்லுவார்கள். தேவாமிர்தமாக திருப்தியாக வயிறு நிறைந்து விடும். கீரைகளின் குண விஷயங்களை எப்படி அறிந்து சொல்லுவார்களோ தெரியாது. பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர்கள் இங்கு வந்து தவத்தில் ஈடுபட்டார்கள். ஈதன்றி வேறு எதிலும் ஈடுபடாதவர்களுக்கு சமையல் பக்குவத்தில் இருந்து இலை தைத்தல், பூ தொடுத்தல், பல வகை ஊறுகாய் போடுதல் போன்ற எல்லா விதமான காரியங்களும் எப்படி அறிந்தார்கள் என்பது மிக ஆச்சரியம் !

பூரணப் பொருளான ஸ்ரீ பகவான் அறியாதது ஒன்றுமில்லை. இலை தைப்பதற்கு இலை பறித்து வருவோம். எச்சம்மாள், அவர் தங்கை, இன்னும் இலை தைக்கத் தெரிந்த அன்பர்களும் ஸ்ரீ பகவானுடன் சேர்ந்து தைப்பார்கள். நன்றாகத் தைக்கத் தெரிந்தவர்களை விட வேகமாகவும், அழகாகவும், சுத்தமாகவும் ஸ்ரீ பகவான் தைப்பார்கள். பார்க்கும்போதே கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படியாக இருக்கும்.

**மூன்று விதமான ஜப முறைகள்** :

தண்டபாணி ஸ்வாமிகள் ஸ்ரீ பகவான் ரமணர் ஸ்கந்தாசிரமத்தில் இருக்கும்போதே வந்தவர். வந்து ஒன்றிரண்டு நாட்கள் கழித்து ஸ்ரீ பகவானிடம், தான் பெரிய குடும்பஸ்தன் என்றும் எல்லாவற்றையும் விட்டு விட்டு ஸ்ரீ பகவானே கதி என்று வந்து விட்டதாகவும் தெரிவித்தார். தனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். பகவானும்

உபதேசம் என்றால் என்ன ?

தான் தானாய் இருப்பதுதான் என்றார்கள்.

அவர் மறுபடியும் ஸ்ரீ பகவான் வாக்கால் உபதேசிக்க வேண்டும் என்று பல முறை கேட்டார்.

ஸ்ரீ பகவான் இவர் விட மாட்டார் என்று தெரிந்து அவரிடம்

நீங்கள் இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் ? ஏன்று கேட்டார்.

அவர் எனக்கு ஒன்றும் தெரியாது. ஸ்ரீ ராம நாம ஜபம் கோடி செய்திருக்கிறேன் என்றார்.

ஸ்ரீ பகவான்

அது போதுமே ! வேறு என்ன வேண்டும் ? விடாமல் அதையே செய்து வந்தால் போதும் என்றார்கள்.

அதை எப்படி ஜபிப்பது என்று கேட்டார்.

**உச்ச ஜபம், உபாம்ஸ ஜபம், மானசீக ஜபம் என்று மூன்று வகை உண்டு.**

உச்ச ஜபம் என்பது உதடு அசையும்படி ஜபிப்பது. அதை விட உயர்ந்தது உபாம்ஸ ஜபம். உதடு அசையாமலே வாய்க்குள்ளே ஜபிப்பது. அதை விட உயர்ந்தது மானசீக ஜபம். மனதையே வாயாகக் கொண்டு ஜபிப்பதாகும். இதன்படி இடைவிடாமல் செய்தாலே போதும் என்று ஸ்ரீ பகவான் விளக்கம் அளித்தார். தண்டபாணி ஸ்வாமிகளும் இதைக் கேட்டு சமாதானம் அடைந்து சிறிது காலம் ஆசிரமத்தில் தங்கி இருந்து விட்டு பின்னர் சென்னைக்குச் சென்றார்.

அங்கு சென்னை தியாலாஜிக்கல் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்து வந்த தன் மாப்பிள்ளை சுப்ரமணிய அய்யர் வீட்டிற்குக் கௌபீனதாரியாகப் போனார். தான் சந்நியாசி ஆகி விட்டதாகவும் ஸ்ரீ பகவானிடம் உபதேசம் பெற்றதாகவும் கூறினார். ஸ்ரீ பகவான் அருளிய ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை புத்தகத்தைக் கொடுத்தார். இந்த சுப்ரமணிய அய்யர் தான் பின்னர் ஸ்ரீ ரமணாசிரமத்தில் சேர்ந்து **முகவைக் கண்ண முருகனார் ஸ்வாமிகள்** ஆனார்.

**ஸ்ரீ குஞ்சு சுவாமிகள் எழுதியுள்ள - எனது நினைவுகள் - என்ற நூலில் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.**

**Courtesy - Sri Hariharasubramanian Venkatasubramanian FB Page**

| நலம் தரும் நவராத்திரி | திரு மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா |
|---|---|



தாயினைத் தெய்வமாக வணங்கும் முறை எமது பாரம்பரியமானதாகும். அதனால் தான் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று அன்னைக்கு முதலிடம் அளித்திருப்பதைக் காண்கின்றோம். "தாய் சொல்லைத் தட்டாதே" என்கின்றோம். பூமியை தாய் என்கின்றோம். பொறுமையைத் தாய் என்கின்றோம். கருணையைத் தாய் என்கின்றோம். கங்கைகளையும் பெண்மையின் நிலையில் கண்டு தாய் என்றே போற்றி நிற்கின்றோம். உலகிலே உயர்ந்து நிற்பது எதுவென்றாய் அது தாய்மைதான். தாய்மைக்கு ஈடாக எதுவுமே இல்லை எனலாம். இதனால்த்தான் தாய்மையை தெய்வத்துக்கு ஒப்பிட்டு சக்தி வழிபாடே தொடங்கியது எனலாம். உலக இயக்கத்துக்கு சக்தியே முதன்மையானது. சக்தி இல்லாவிட்டால் உலக இயக்கமே அற்றுவிடும். இந்த அடிப்படையில் சக்தியை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதே நவராத்திரி ஆகும். சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. ஆனால் சக்திக்கு ஒன்பது ராத்திரிகள். அதுதான் நவராத்திரி. அனைத்து இயக்கங்களுக்கும் ஆதார சக்தியாக அம்பிகை விளங்குவதால் ஒன்பது ராத்திரிகள் அமைந்துவிட்டன என்றுதான் எண்ண முடிகிறது. நவராத்திரி எப்பொழு ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கும் பொழுது - பாரத காலம், இராமாயண காலம் வந்து நிற்கிறது. நீண்ட காலமாகவே நவராத்திரி கைக்கொள்ளப் பட்டு வந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

நவராத்திரி என்பது வருஷத்தில் நான்கு முறை வருவதைக் காண்கிறோம். தைமாதத்தில் வருவது மஹா நவராத்திரி, பங்குனியில் வருவது வஸந்த நவராத்திரி, ஆனியில் வருவது ஆஷாட நவராத்திரி, புரட்டாசியில் வருவது சாரதா நவராத்திரி. இந்த சாரதா நவராத்திரியையே இந்தியாவில் தமிழகத்திலும் , இலங்கையிலும் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பது நோக்கத் தக்கதாகும்.

நவம் என்றால் ஒன்பது என்பது எண்ணிக்கையாகும். அது எண்ணிக்கை மட்டுமல்ல - புத்துணர்ச்சி என்னும் கருத்தும் இதில் அடங்கி நிற்கிறது எனலாம். கலைகளைப் போற்றி நின்று கொண்டாடும் வழிபாட்டு விழாவாக நவராத்திரி அமைகிறது எனலாம். கலைகளை முன்னிறுத்தி அனுட்டிக்கும் பொழுது அங்கு புத்துணர்வு மேலிடுவது இயல்பான ஒன்றல்லவா? இதனால் நவராத்திரி புத்துணர்வினை நல்கி புதுத்தெம்பு பெருகி வாழ்வில் மகிழ்வினை நல்கிட உதவும் விரதமாய், கொண்டாட்டமாய் அமைகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

எங்களின் சமயம் எங்களுடன் இணைந்தே வருகிறது. ஆனபடியால்த்தான் வளர்ந்து கொண்டே வருகிறதே அல்லாமல் தளர்வுண்டு போகாதிருக்கிறது எனலாம். காரணம் சமயத்தை வாழ்வியல் ஆக்கிக் கொண்டதே முக்கிய நிலை எனலாம். கடவுளையே உறவு முறையில் அழைத்து கடவுளுக்கே குடும்பமும் வைத்து வாழ்வியயோடு இணைத்து நிற்கும் சமயத்தை உலகில் எங்குமே காணமுடியாது. அதனால் வாழ்வுக்கு வாழ்வியலுக்கு எவை எல்லாம் இன்றியமையாதனவோ அவற்றையெல்லாம் இறையுடன் இணைத்து அவற்றுக்கு பெருமையும் பெறுமதியும் காட்டி நிற்பதுதான் எங்கள் சமயத்தின் உன்னதம் எனலாம். அந்த வகையில் நலம் தரும் நவராத்திரியும் வந்து அமைகிறது. வாழ்வினில் செம்மையாக வாழ எவையெல்லாம் எமக்குத் தேவை என்பதைத் தொட்டு நிற்பதுதான் நலம் தரும் நவராத்திரி எனலாம்.

ஆரோக்கியம் வேண்டும். பொருள் வேண்டும். நல்லறிவு வேண்டும். ஆரோக்கியம் என்னும் பொழுது வீரம் வருகிறது. பொருள் என்னும் பொழுது செல்வம் வருகிறது. அறிவு எனும் பொழுது கல்வி வருகிறது. கல்வியும், செல்வம், வீரமும் வேண்டிப் பிரார்த்தித்து நிற்பதுதான் நவராத்திரியாய் மலர்கிறது. வீரத்துடனும், செல்வத்துடனும் அறிவு அதாவது கல்வியான இணைய வேண்டும். அப்படி இணைந்தால்த்தான் வீரமும் செல்வமும் ஒழுங்கான முறையில் பயனை அளிக்கும். அப்படி அமையும் பொழுது அங்கே வெற்றி என்னும் வெளிச்சம் பிரகாசமாய் வந்து நிற்கும். இதுதான் உண்மை. இதுதான் நிச்சயம். இதனை உணர்த்துவதாய் அமைவதுதான் நவராத்திரி. இந்த வெற்றியையே விஜயதசமி என்று கொண்டாடி மகிழ்கிறோம்.

வீரத்தை துர்க்கையாகவும், செல்வத்தை இலக்குமியாகவும், கல்வியை சரஸ்வதியாகவும் எங்கள் சமயம் காட்டுகிறது. இங்கே காட்டப்படும் மூன்றுமே பெண்களாய் அதாவது சக்தியாய் இருப்பது நோக்கத்தக்கதாகும். பெண்மை என்றால் தாய்மை. பெண்மை என்றால் பொறுமை. பெண்மை அடங்கினால் மென்மை. பெண்மை பொங்கினால் வெம்மை. பெண்மைக்குள்ளே எல்லாமே அடக்கம். பெண்மைதான் இயக்கம். அதனால்த்தான் கல்வியை, செல்வத்தை, வீரத்தையும் வழங்கும் கடவுளர்களாக பெண்மை உருவாக்கப்பபட்டது. கல்வியை, செல்வத்தை, வீரத்தை இலகுவாகப் பெற்றுவிட முடியாது. முயற்சி வேண்டும். அதற்கு அளவில்லா பொறுமை வேண்டும். விடாத துணிவு வேண்டும். இவை அத்தனையும் பெண்மை என்னும் சக்தியிடம்தான் நிறைவுற்று இருக்கிறது. எனவே தான் முச்சக்திகளை மூன்று முக்கிய வாழ்வியல் முறைகளுக்கும் தெய்வமாக்கினார்கள்கள் எங்கள் முன்னோர்கள்.

அறிவுடன் செல்வமும் வீரமும் இணைந்து நின்றால் நிச்சயம் அங்கே வெற்றிதான். அறிவினை விட்ட செல்வமோ, வீரமோ வெற்றி என்னும் இலக்கினை அடையாது. பயனற்றே போய்விடும். இதனையே புராணங்கள் காட்டி நிற்கின்றன. வாரணம் பொருத மார்பு - வரையினை எடுத்த தோழ்கள் - சங்கரன் கொடுத்த வாள் ; அத்தனையும் இருந்தும் மாவீரன் என்னும் பெயர்பெற்ற செல்வாக்குடன் திகழ்ந்த இராவணன் ஏன் வீழ்ந்தான் ? படைபலம் நிறைந்து , அரண்மனை செல்வாக்குடன் அரசாட்சியில் இருந்த துரியோதனன் ஏன் வீழ்ந்தான் ? உரமும் வரமும் பெற்ற சூரன் ஏன் விழ்ந்தான் ? அறிவுடன் செல்வமும் வீரமும் அணையாது நின்றதே காரணம் என்று காப்பியங்கள் புராணங்கள் காட்டி நிற்கின்றன.

இறை சக்தியால் நாமெல்லாம் இயங்குகிறோம். இறை சக்தியே எமக்கு இயக்க சக்தியாகும். அந்தச் சக்தியே அறிவை செல்வத்தை ஆற்றலை அளிக்கிறது. அந்த அளவிட முடியாத சக்தி அளித்த ஆற்றலை அந்தச் சக்தியின் ஆசியுடன் வாழ்வில் கையாண்டால் வாழ்க்கை வழமாகும். வாழ்க்கை வையயத்துழ் வசந்தமாக அமையும். இப்படி வாழ்வியலோடு இணைந்த சக்தியாய் அமைவது தான் நவராத்திரி ஆகும். கோவிலுக்குப் போய் கொண்டாடாமல் கோயிலுக்குப் போய் வழிபடாமல் வீட்டிலேயே இருந்து பாடிப்பரவி கைக்கொள்ளும் நிலையில் நவராத்திரி அமைந்திருக்கிறது. கும்பம் வைத்து கொலு வைத்து கூடியிருந்து மலைமகளை, அலைமகளை கலைமகளைப், பாடிப்பரவும் விழாவாக நவராத்திரி அமையப் பெற்றிருக்கிறது.

ஏனைய விரதங்களைப் போல் அல்லாமல் நவராத்திரி விரதம் கலைகளின் சங்கமமாய் அமைந்திருக்கிறது என்பதால் அனைவராலும் தவறாமல் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது எனலாம். நவராத்திரியில் கொலு வைப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். கொலு வைத்தல் என்பது அழகுக்குக்கோ அல்லது ஆடம்பரத்துக்கோ அல்ல. அந்தக் கொலு கூட வாழ்வியலின் தத்துவமேயாகும். ஒன்பது படிகள் வைத்து கொலு அமைக்கப்படுகிறது. ஒன்பது என்பது வெறும் எண்ணிக்கை அல்ல. அதிலும் அர்த்தமே நிறைந்திருக்கு. முதற்படியில் ஓரறிவு உயிரினப் பொம்மைகள், இரண்டாவது படியில் இரண்டறிவு உயிரினப் பொம்மைகள் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது படியில் அந்த எண்ணிக்கை சார்ந்த உயிரின அடையாளங்கள், ஆறுவது படியில் மனித உருவப் பொம்மைகள், ஏழாவது படியில் மனிதனுக்கு அப்பாற்பட்ட ரிஷிகளின் பொம்மைகள், எட்டாவது படியில் தேவர்கள், நவக்கிரகங்கள், ஒன்பதாவது படியில் இறைவனது பொம்மைகள் என்று கொலு வைப்பது வழக்கமாகும்.

இங்கு கொலு வைக்கப்பட்ட முறையான உயிர்களின் வளர்ச்சி நிலையினைக் காட்டுவதாக அமைகிறது எனலாம். மணிவாசகப் பெருமான திருவாசகத்தில் காட்டிய "

**புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி .......**
**கல்லாய் மனிதராய் .....முனிவராய் தேவராய் .... "**

என்பது நினைவுக்கு வருகிறதல்லவா ?

வணங்கும் கோவில், வாழும் வீடு, கற்கும் பள்ளிக்கூடம், தொழில் புரியும் தொழிற்கூடம், பணிமனைகள், அத்தனையும் கொண்டாடி மகிழும் விழாவாக விளங்குவது நவராத்திரி ஒன்றே எனலாம். பக்தியுடன் கூடிய பாட்டும் பக்தியுடன் கூடிய நடனங்களும், பக்தியுடன் கூடிய ஒன்று கூடலும் இணையும் நிலை காணப்படுவதால் **நலம் தரும் நவராத்திரி** என்பது பொருத்தமாய் அமைகிறது அல்லவா ?

**தனந் தரும் கல்வி தரும் ஒரு நாளும்**
**தளர்வு அறியா மனந் தரும் நெஞ்சில் வஞ்சம்**
**இல்லா இனம் தரும் நல்லன எல்லாம் தரும்**
**அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள்**
**அபிராமி கடைக் கண்களே**



jeyaramiyer@yahoo.com.au



### ஒன்றாய்ப் பலவாய் ப்ரம்மமாய்.....

## பரம்பொருளின் இருப்புத்தன்மையும் செயல்படும் நிலைலையும்

"வாசித்துக் காணொணாதது" எனும் திருப்புகழில், பரமான்மா, வெகு தூரத்தில் ஆகாயத்திற்கும் அப்பால் இருப்பது என்பதை பார்த்தோம். 'இருவர் மயலோ' என்னும் திருப்புகழில் முருகன் 'பரம குருவா யணுவி லசைவாய் பவன (காற்று) முதலாகிய பூதப்படையு முடையாய் சகல வடிவாய் பழைய வடிவாகிய இறைவா" என்று கூறி, முக்கியமாக 'அணுவில் அசைவாய் செயல்படுவதும் அவனே', என்கிறார். இவ்வாறு இறைபொருளின் **இருப்புத் தன்மையையும் வெளிப்படும் நிலையும்** (ஆங்கிலத்தில் Being and Becoming என்பார்கள்.) பற்றி ஆராய முற்படுவதே இந்த அத்தியாயத்தின் முக்கிய அம்சமாகும். அதனுடைய வெளிப்படும் தன்மையின் (manifestation) பின்னணியில் ஏதோ ஒரு குறிக்கோள் உள்ளதால் அதுவே அதனுடைய செயல்படும் தன்மையும் ஆகிறது. ஆங்கிலத்தில் சொல்வதென்றால் the is-ness and its doership என்றும் வைத்துக் கொள்ளலாம்.

செயலே இல்லாத வெறும் இருப்பு நிலை என்பது 'ஸத்' எனப்படுகிறது. அது நிர்குணமாய், அக்ஷரப்பொருளாய், அசையும் தன்மையற்றதாய், சாந்தமாய், எந்த விதமான மாறுதலுக்கும் உட்படாததாய் முக்காலத்திற்கும் அப்பாற்பட்டதாய், எல்லாவற்றிற்கும் காரணப் பொருளாய் இருக்கிறது என்பதைக் கண்டோம். அந்த ஸத் எனும் மூலப்பொருள் ஸங்கல்ப மாத்திரத்தினாலேயே தன்னுள்ளில் இருந்தே சிச்சக்தியை வெளிப்படச் செய்து இப்ரபஞ்சத்தைப் படைக்கிறது. அந்த சக்தியை மாயை என்றும், மூலப்ரக்ருதி என்றும் பெயரிட்டு அழைக்கிறோம். முண்டக உபநிஷத்தில் यथोर्णनाभि: सृजते च यथा पृथिव्यामोषदय: सम्भवन्ति |यथा सत: पुरुषात्केशलोमानि तथाक्षरात्सम्भवतीह विश्वं || (1.1.7) என்று வரும். அதாவது எவ்விதம் சிலந்தி தன்னிடமிருந்தே தோன்றும் உமிழ் நீரினால் வலையை உற்பத்தி செய்கிறதோ பின்னர் தனக்குள் எடுத்தும் கொள்கிறதோ, எவ்விதம் மரங்கள் பூமியில் தோன்றுகின்றனவோ, எவ்விதம் உயிருடன் இருக்கின்ற மனிதனிடமிருந்து தலையிலும் உடலிலும் உள்ள முடிகள் தோன்றுகின்றனவோ, அவ்விதமே அழியாத ப்ரஹ்மனிடமிருந்து இங்கு உலகம் தோன்றுகிறது. तपसा चीयते ब्रह्म ततोऽन्नमभिजायते | अन्नात्प्राणो मन: सत्यम् लोका: कर्मसु चामृतं|| (1.1.8)

ப்ரஹ்மன் அறிவால் ஸ்ருஷ்டிக்குத் தயாராகிறது; அதனிடமிருந்து படைக்கும் சக்தி உருவாகிறது. அதனின்றும், ஸூக்ஷ்ம ப்ரபஞ்சமும், அதனைத் தொடர்ந்து ஸமஷ்டி மனமும், பின்னர் (பஞ்சீகரணத்தால்) ஸ்தூல பூதங்களும் உலகங்களும் செயல்களும் கர்மபலன்களும் உண்டாகின்றன.

இந்த முண்டக உபநிஷத் மந்திரத்தில் பெரியதொரு தத்துவத்தை நாம் அன்றாடம் காணக்கூடிய உதாரணத்தின் மூலம் புகட்டுகிறது. சிலந்தி வலை பின்னுவதற்கு வெளியிலிருந்து பொருளை எடுத்துக் கொள்வதில்லை. தன் உடம்பிலிருந்தே எடுத்துக் கொள்கிறது. பின் வேண்டாத போது தன்னுள்ளே இழுத்துக் கொண்டு விடுகிறது. அதைப் போலவே பரம்பொருளும் தன்னிடமிருந்தே பொருளை எடுத்து ஸ்ருஷ்டித்துப் பின்னர், அதை தனக்குள்ளேயே லயமடையச் செய்லகிறது. இதை 'அபின்ன நிமித்த உபாதான காரணம்' என்பார்கள். இதை மண் பானை - குயவன் உதாரணத்திலிருந்து விளக்கலாம். ஒரு குயவன் தன் உடலிலிருந்து எதையோ பிய்த்தெடுத்து பானையைச் செய்வதில்லை. அவனுக்கு பானை செய்ய தனக்கு அந்நியமான களிமண் தேவைப் படுகிறது. அவன் நிமித்த காரணமாகவே செயல் படுகிறான். ஆனால் பரம்பொருளோ ஜகத்தை ஸ்ருஷ்டி செய்வதற்கு வேண்டிய பொருளை தன்னுள்ளிலிருந்தே எடுத்துக் கொள்கிறது. தர்க்கப்படி பார்த்தாலும் இது இப்படித்தான் இருக்க வேண்டும். ஏனெனில், பரம்பொருள் ஸ்ருஷ்டிப்பதற்காக வேண்டிய மூலபொருளைத் தனக்கு வெளியேயிருந்து எடுத்துக் கொள்கிறது என்றால் அதனுடைய வ்யாபகத் தன்மை அல்லது எங்கும் நீக்கமற இருக்கும் தன்மை பொய்யாகி விடும்.

'**ஆனாத ப்ருதிவி**' எனும் திருவேரகத் திருப்புகழில் பரம்பொருளின் இருப்புத் தன்மையையும் செயல் நிலையையும் ஒரு சேர முத்தும் பவளமும் கோர்க்கப் பட்ட மாலையாய்த் தருகிறார்.

**ஆனாத பிருதிவிப் பாச நிகளமும்**
**மாமாய விருளுமற் றேகி பவமென**
**வாகாச பரமசிற் சோதி பரையைய ...... டைந்துளாமே**
**ஆறாறி னதிகமக் க்ராய மநுதினம்**
**யோகீச ரெவருமெட் டாத பரதுரி**
**யாதீத மகளமெப் போது முதயம ...... நந்தமோகம்**
**வானாதி சகலவிஸ்த் தார விபவரம்**
**லோகாதி முடிவுமெய்ப் போத மலரயன்**
**மாலீச ரெனுமவற் கேது விபுலம ...... சங்கையால்நீள்**
**மாளாத தனிசமுற் றாய தரியநி**
**ராதார முலைவில்சற் சோதி நிருபமு**
**மாறாத சுகவௌத் தாணு வுடனினி ...... தென்றுசேர்வேன்** ( முதல் பகுதி மட்டும் )

**ஆனாத பிருதிவிப் பாச நிகளமும்** ... நீங்குதற்கு அரிய மண்ணாசை என்ற விலங்கும் ; **மாமாய இருளுமற்று:** ... பெரும் மயக்கத்தைத் தரும் ஆணவம் என்ற இருளும் ஒழிந்து, (தூய பேறறிவால்) ; **ஏகி பவமென** ... ஒன்றுபட்ட தன்மை என்று கூறும்படியாக ; **ஆகாசபரமசிற் சோதி** ... வானம் போல் பரந்த பெரிய ஞான ஜோதியான ; **பரையை அடைந்து உளாமே** ... பராசக்தியை அடைந்து நினைப்பேதுவும் இன்றி ; **ஆறாறின் அதிகம் அக்ராயம்** ... முப்பத்தாறு மேலான தத்துவங்களுக்கு அப்பால் முதன்மையானதாய், **அநுதினம் யோகீசர் எவரும் எட்டாத ...** என்றும் யோகீசர் எவர்க்கும் எட்டாததான **பரதுரிய அதீதம் அகளம்** ... பெரிய துரிய நிலைக்கும் மேம்பட்டதாய், உருவம் இல்லாததாய், **எப்போதும் உதயம் அநந்தமோகம்** ... எப்போதும் தோன்றி நிற்பதாய், அளவற்ற வசீகரம் வாய்ந்ததாய், **வானாதி சகலவிஸ்தார விபவரம்** ... வான் முதலிய எல்லாமாய் விரிவான உயிர்ப் பொருளாய், **லோகாதி முடிவு மெய்ப் போத** ... உலகத்தின் முதலாகவும் முடிவாகவும் விளங்குவதாய், உண்மை அறிவாய்.

இவ்வாறு பரம்பொருள் தன் இச்சா சக்தியினாலேயே சித்சக்தியின் உந்துதலால் இவ்வகில லோகங்களையும் படைத்து, அச்சக்தியின் பேரொளியிலேயே தன்னுடைய ஸ்ருஷ்டியான ஜகத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறது.

**மலரயன் மாலீச ரெனுமவற்கு** ... தாமரையான் பிரமன், திருமால்,சிவபிரான் என்ற மும்மூர்த்திகளுக்கும் ; **ஏது விபுலம்** ... மூலகாரணமாக விளங்கும் பெருமை வாய்ந்ததாய், **அசங்கையால் நீள்** ... சந்தேகம் இன்றி நீடூழிகாலம் ; **மாளாத தன் நிசமுற்றாயது** ... இறப்பின்றி தானே மெய்த்தன்மைத்தாக இருப்பதாய் ; **அரியநிராதாரம்** ... அரியதாய், மற்ற ஒன்றையும் சாராததாய் ; **உலைவு இல்சற் சோதி** ... அழிவின்றி சத்திய ஜோதியாகத் துலங்குவதாய் ; **நிருபமும்** ... உருவம் ஏதும் இல்லாததாய் ; **மாறாத சுகவெ(ள்)ளத் தாணுவுடன்** ... மாறுதல் இல்லாது விளங்கும் இன்ப வெள்ளமான சிவத்துடன் ; **இனிதென்றுசேர்வேன்** ... யான் இனிமையாக என்றைக்கு இணைவேன்?

**'ஸத்' தின் செயல் தன்மையின் பிரமாணம்**

சூரிய - சந்திரனின் கிரணங்களால் நாம் எல்லா வஸ்துக்களையும் பார்த்தாலும், அந்த ஒளியே பரமாத்ம ஒளியின் பிரதிபலிப்புத்தான். அதை போலவே கண் ஒரு பொருளைக் காண வெளிச்சம் தேவைப் படுகிறதென்றாலும் இந்த்ரியங்களின் பின்புலத்தில் உள்ள சிதாபாசமின்றி ஒரு ஜீவன் அப்பொருளையும் பொருட்கள் உள்ள ஜகத்தையும் காண இயலாது. இவ்வாறு காண்பவனாகவும், காணப்படுபொருளாகவும், காணும் தன்மை உடையதாகவும் இருப்பது அப்பரம்பொருள்தான். 'ஆனாத ப்ருதிவி' எனும் மேலே குறிப்பிட்ட திருப்புகழ் பகவத் கீதையின் 15 வது அத்தியாயத்தின் சாராம்சமாக அமைந்துள்ளது எனலாம். கீதாசாரியன் அர்ச்சுனனுக்குக் கூறுகிறான், "பார்த்தா, எக்காலத்தும் என்னுடைய அம்சமே ஜீவனாகத் தோன்றி மனத்துடன் சேர்த்து ஆறு இந்த்ரியங்களாகவும் இருக்கிறேன், என் வலிமையால் இந்த பூமியைத் தாங்குகிறேன், உதரக்கனலாக இருந்து உயிர்களின் அன்னத்தை செரித்துக் காக்கிறேன், அவைகளின் ஞானமும் நினைவுமாக இருக்கிறேன், வேதமும்-வேதத்தின் உட்பொருளாகவும் இருக்கிறேன். க்ஷரம் அக்ஷரம் என்று இரண்டே புருஷர்கள் இருக்கிறார்கள். க்ஷரப் பொருள் அழியும், அக்ஷரம் அழியாதது. அதுவே எல்லாவற்றையும் படைக்கும் மூல ப்ரக்ருதி தத்வம் ஆகும். இவை இரண்டுக்கும் மூல காரணம் நானே. இவ்வாறு அழியும் தன்மையதான ப்ரபஞ்சத்தைக் கடந்து, அக்ஷரமாகிய மூலப்ரக்ருதியான ஈசுவரனுக்கும் மேலான புருஷோத்தமன் எனும் பெயர் எனக்கு உரியதாகிறது." 'ஆனாத ப்ருதிவி'யில் இவ்வளவு விஸ்தாரமாய்க் கூறியுள்ள விஷயத்தை நறுக்குத் தெறித்தாற் போல் தன்னால் கூற முடியும் என்பதையும் "ஊனேறெலும்பு" எனும் வேறொரு திருப்புகழில் அருணகிரிநாதர் கீழ் வருமாறு பகர்கிறார்.

**தானே புணர்ந்து தானே யறிந்து தானே மகிழ்ந்து ...... அருளூறித்**

**தாய்போல் பரிந்த தேனோ டுகந்து தானே தழைந்து ...... சிவமாகித்**

**தானே வளர்ந்து தானே யிருந்த தார்வேணி யெந்தை ...... யருள்பாலா.**

**मय्येव सकलं जातं मयि सर्वम् प्रतिसष्ठितम् |**

**मयि सर्वम् लयम् याति तद् ब्रह्माद्वयमस्म्यहम्|| (कै. उ 1.19)**

என்னிடத்திலிருந்தே அனைத்தும் தோன்றின. என்னையே அனைத்தும் சார்ந்துள்ளன. என்னிடத்தில் அனைத்தும் ஒடுங்குகின்றன. நான் அந்த இரண்டற்ற ப்ரம்மனாக இருக்கிறேன் என கைவல்ய உபனிஷத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. “எனது யானும் வேறாகி ... எவரும் யாதும் யான் ஆகும் ... இதய பாவன அதீதம் அருள்வாயே .. (அமலவாயு எனும் திருப்புகழ்)”-- இது அருணகிரியின் வாக்கு. எனது மற்றும் யான் எனும் த்வைத தேஹாபிமானத்தை அறவே அகற்றி, இந்த உலகத்தில் உள்ள பொருட்கள் யாவும் நான் என்கின்ற பாவனையை அல்லது உணர்வை பெறுமாறு அருள் புரிவாய் என வேண்டுகிறார். புருஷ ஸூக்தம் எனப்படும் மந்த்ர தொகுப்பிலும் பரம்பொருளான புருஷோத்தமனே இப் ப்ரபஞ்சத்தின் படைப்புக்கு காரணமானவன் என்கிறது.

ஆயிரம் கோடி சூரிய கிரணங்களை ஒத்த பிரகாசம் உடைய அந்த பரப்ரம்மம் ஆயிரக்கணக்கான தலைகளையும், கால்களையும், கைகளையும் உடையது. முக்காலத்துக்கும் அப்பாற்பட்டது, அதன் கால்பாகமே ஸ்தூல ரூபத்தில் வெளிப்பட்டுள்ளது (ப்ரபஞ்ச்சத்தின் மூலமாக). மீதி முக்கால் பாகம் வெளிப்படாததாக உள்ளது. வெளிப்பட்டுள்ள கால்பாகத்தில் . செயலே இல்லாத ப்ரம்மம் தனக்குத் தானே தற்பரமாய் இருந்த போது முக்கடவுள்களின் ஒன்றான ப்ரஹ்மாவால் செய்யப்பட்ட யாகத்தின் விளைவாக ப்ரம்மம் ஸ்ருஷ்டியைத் துவக்கியது. முதலில் விராட் புருஷன் தோன்றினான். பின்னர், மஹத் தத்வமும், பஞ்ச பூதங்களும், மனதையும் சேர்த்து பதினோரு புலன்களும் சமஷ்டியாக இந்த அண்டம் தோன்றியது. பின் முக்காலங்களும் அதன் பகுதிகளும் தோன்றின. (பல வகையான யாகங்களினால்) ப்ரம்மாவானவர் படைப்புத் தொழிலைத் துவக்கி, உயிரினங்களைப் படைத்தார்

இவ்வாறு ஜீவனையும் ஜகத்தையும் படைக்கும் பரம்பொருளே தன்னில் தானாய் ஒரு துணையுமின்றி இருக்கும் தன்மை படைத்தது. மற்றவை எல்லாம் சார்புத் தன்மையுள்ளதே. அவைகளால் தனித்து இயங்கக முடியாது. ஜீவர்களும் ஜகத்தும் உயர்ந்த - நித்ய உண்மையாகத் திகழ முடியாது. அவை பிராதிபாஸிக சத்யம் எனும் வகையை சேர்ந்தவை. இதைத்தான் சங்கரர் ‘ஜகன்மித்யா’ என்கிறார். இரண்டாயில்லாததான பரமாத்மாவே **பாரமார்த்திக ஸத்யம்** எனப்படும்.

**சிச்சக்தி, மூலப்ரக்ருதி, மாயை**

அசையாது இருக்கும் சிவனில் ஒரு சலனம் ஏற்பட்டு சிச்சக்தி வெளிப்படுகிறது. அதுவே காரிய ப்ரபஞ்சத்தின் ஆதாரம் எனலாம். ஆங்கிலத்தில் இதை ‘consciousness’ எனப்படுகிறது. ஒவ்வொரு ஜீவனிலும் ‘நான்’ என்பதில் ‘இருக்கிறேன்’ என்ற உணர்வும் சேர்ந்ததது தான் சைதன்யம் எனும் பெயர் பெறுகிறது. பல மனிதர்கள் கூடியுள்ள இடத்தில் விளக்குகள் எல்லாம் அணைந்து விட்டால், தொட்டுப் பார்க்காமல் நம்மால் மற்றவர்கள் இருக்கிறார்களா என்று கூற முடியாது. ஆனால் ‘நான் இருக்கிறேன்’ என உணர முடியும். எப்பேற்பட்ட இருட்டிலும் நமக்குள் இந்த உணர்வு இல்லாமல் போவதில்லை. இச்சக்திதான் பரப்ரம்மம் எனும் பேரொளியிலிருந்து பிராதிபாஸிக ஒளியாக ஜீவாத்மாவில் பிரதிபலிக்கிறது என வேதம் கூறுகிறது. இதனாலேயே ஜீவனும் தெய்வத் தன்மை கொண்டவன் என்கிறோம்.

மஹத் தத்வத்திலிருந்து வெளிபட்ட சக்தியே மூலப்ரக்ருதி எனப்படும். பரப்ரம்மத்திற்கு மூலப்ரக்ருதி ஓர் உபாதியாகக் கருதப்படும் போது புருஷோத்தமனே செயல் படும் ஈசுவரனாக ஆகிறார். அவருக்கு சகுணப்ரம்மம் எனும் பெயர் ஏற்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல் மற்றும் அனுக்ரஹித்தல் எனும் அடிப்படைச் செயல்களைச் செய்கிறார்..

**இப் ப்ரபஞ்சம் காரண காரியத்தின் விளைவே**

**காரண காரிய லோகப்ர பஞ்சச்**
**சோகமெ லாமற வாழ்வுற நம்பிற்**
**காசறு வாரிமெய்ஞ் ஞானத வஞ்சற் ...... றருளாதோ (தோலொடு)**

விஞ்ஞானத்தில் காரணமும் விளைவும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை என நாம் படித்திருக்கிறோம். ஒவ்வொரு விளைவுக்குப் பின்னாலும் ஒரு காரணம் இருக்க வேண்டும். மெய்ஞானமும் இதை மறுக்கவில்லை. மாறாக அதன் துணை கொண்டே ப்ரம்மத்தின் இருப்புத் தனமையையும் செயல் நிலையையும் விளக்க முயற்சிக்கிறது. உதாரணமாக, ஒரு சட்டையை எடுத்துக் கொண்டால், அதன் காரணப் பொருள் துணியாகும். துணியின் காரணப் பொருள் பருத்தி, பருத்தியின் காரணப் பொருள் பருத்தியின் செடி, அதன் காரணப் பொருள் பருத்தி விதை ஆகும். இவ்வாறு கூர்ந்து ஆய்வு செய்து கொண்டே போனால், பஞ்ச பூதங்களுக்கு சூக்ஷ்ம பஞ்ச பூதங்கள் காரணமாகி, அதன் பின் சூக்ஷ்ம பஞ்ச பூதங்களும் கார்யமாகி, இறுதியில் ஸத் எனும் ஒரே காரண வஸ்துவில் போய் முடியும். துணி மட்டுமல்ல, இவ்வுலகில் எப்பொருளை எடுத்துக் கொண்டாலும் அதன் மூல காரணம் இரண்டில்லாததான ஒரே மெய்பொருள்தான். அதுவே எல்லோரையும் எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் உண்மை தத்துவம். அதுவே எல்லாவற்றிற்கும் மூல காரணம். மற்றவை எல்லாம் மாயைதான். எனவேதான் அருணகிரிநாதர் அனுபூதியில் "தன்னந்தனி நின்றது தான்" என்றும் கந்தர் அலங்காரத்தில் ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்து உச்சியின் மேல் அளியில் விளைந்ததொரு ஆனந்தம்" என பரம்பொருளை விளிக்கிறார்.

**காரணம் ஒன்று காரியங்கள் பல:**

வடிவமும் பெயரும் இல்லாத நுண்ணிய வஸ்துவிடமிருந்து பெயருள்ள ஸ்தூல பொருள்களும், குணமற்றதிலிருந்து குணமுள்ளவைகளும், அழிவற்றதிலிருந்து அழிவுள்ளவையும், மாறுபடாத ஒன்றிலிருந்து மாறுதலுக்குட்பட்ட பலவும் தோன்றின என்று ப்ரபஞ்சத்தின் தோற்றத்தை வெகு சுருக்கமாக அறிந்தோம். இதில் முதலாவது காரணமும் அதன் மூலம் ஏற்படுவது கார்யம் என்றும் கூறப்படுகிறது. காரணப் பொருளில் ஒடுங்கி இருந்த கார்யம் மாயையினால் வெளிப்படுகிறது என்றும் பார்த்தோம். உலகம் நடைபெறுவதற்கு கார்யம் மிக அவசியமே. அதுவும் அப்பரம்பொருளினால் ஏற்பட்ட லீலையே.

विश्वं दर्पणदृश्यमाननगरीतुल्यं निजान्तर्गतं
पश्यन्नात्मनि मायया बहिरिवोद्भूतं यथा निद्रया ।
यः साक्षात्कुरुते प्रबोधसमये स्वात्मानमेवाद्वयं
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

இந்த உலகம் கண்ணடியில் தோன்றும் நகரம் போன்றது. அறியாமையினால் கனவில் தோன்றுவதை நிஜம் என நினத்து பின் தூக்கத்திலிருந்து விழித்தபின் தன்னுடைய ஸ்வரூபத்தையே இரண்டற்ற ஒன்றாக எவன் காண்கிறானோ ஆதி குருவான அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

बीजस्याऽन्तरिवाङ्कुरो जगदिदं प्राङ्गनिर्विकल्पं पुनः
मायाकल्पितदेशकालकलना वैचित्र्यचित्रीकृतम् ।
मायावीव विजृम्भयत्यपि महायोगीव यः स्वेच्छया
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये

விதைக்குள் இருக்கும் முளையைப் போன்று தனக்குள் ஏது வேற்றுமையும் இன்றி இருந்த உலகத்தை ஸ்ருஷ்டிக்குப் பின் மாயையின் கற்பனா சக்தியினால் தேச காலங்கலையும், அதன் கர்ம பலன்களினால் உண்டாகும் உலகையும் அதன் தோற்றத்தையும் யாரோ ஓர் கை தேர்ந்த மந்திரவாதி போல் தன் இச்சா சக்தியினாலேயே யார் ஸ்ருஷ்டிக்கிறானோ அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம் என்கிறார் ஆதி சங்கரர்.

இதன் எதிரொலி தான் கீழ்கண்ட அழகான திருப்புகழோ?

**சுருதி யாயிய லாயியல் நீடிய தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்**
**தொடர்பு மாயடி யாய்நடு வாய்மிகு ...... துணையாய்மேல்**
**துறவு மாய் அறமாய் நெறி யாய்மிகு விரிவுமாய் விளைவாய் அருள் ஞானிகள் சுகமுமாய்**
**முகிலாய் மழையாய் எழு ...... சுடர்வீசும்**
**பருதியாய் மதியாய் நிறை தாரகை பலவுமாய் வெளியாய் ஒளியாய் எழு**
**பகலிராவிலையாய் நிலையாய் மிகு ...... பரமாகும்**
**பரமமாயையின் நேர்மையை யாவரும் அறியொணாததை நீ குருவாய் இது**
**பகருமாறு செய்தாய் முதல்நாளுறு ...... பயனோதான்**

(ஒன்றிலிருந்து) பலவுமாய், பல மொழிகளில் கொள்ளப்பட்ட சம்பந்தமுமாய், அனைத்தையும் துறந்த நிலையதாய், தருமமாய், நல்லொழுக்க வழியாய், மிகுந்த விரிவு உடையதாய், விளைவுப் பொருளாய், அருள் நிறைந்த ஞானிகள் அனுபவிக்கும் சுகப் பொருளாய், முகிலாய் மழையாய், எழுசுடர் வீசும் பருதியாய், மதியாய், மேகமாய், மழையாய், ஏழு வகைச் சுடர்க் கிரணங்களை வீசும் சூரியனாய், சந்திரனாய், நிறைந்துள்ள நட்சத்திரங்கள் பலவுமாய், ஆகாய வெளியாய் ஜோதியாய் உண்டாகின்ற பகலும் இரவும் இல்லாததாய், நிலைத்துள்ளதாய், மிக்க மேலான பொருளான பெரிய மாயையின் உண்மைத் தத்துவத்தை, எவரும் அறிய முடியாததை, நீ குருவாக வந்து (அதை உலகுக்கு) எடுத்து ஓதுமாறு (எனக்குத்) திருவருள் புரிந்தாய் முதல் நாள் உறு பயனோ தான் ... (இந்த பாக்கியம்) நான் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயன் தானோ? ஒன்றான 'ஸத்' எனும் காரணத்திலிருந்து மூல ப்ரக்ருதி மாயையினால் பலவாறாகவும் இந்த ஜகத் அல்லத் உலகம் எப்படி உண்டாயிற்று அருணகிரிநாதர் விளக்குகிறார்.

அது மட்டுமல்ல. இறைத்தன்மையின் இருப்புத்தன்மை என்பது அணுவிற்கணுவிலும் இருக்கிறது. அதுவே மஹத்திலும் மஹத்தான அகாயத்தையும் கடந்து விரவி இருக்கிறது. அது இல்லாத இடமே இல்லை என்பதை கீழ்வரும் திருப்புகழில் அருணகிரிநாதர் விளக்குகிறார். வேதங்களின் மொத்த சாரமுமே இந்த திருப்புகழில் அடங்கி இருக்கிறது எனலாம். இதோ நாமும் அனுபவிக்கலாம்.

**அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்**
**அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்**
**அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை எப்பொருளு ...... மாய**
**அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய**
**முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய**
**அணுவையணு வினின்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு மற்றதொரு ...... காலம்**
**நிகழும்வடி வினைமுடிவி லொன்றென்றி ருப்பதனை**
**நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை**
**நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ ரித்தபெரு ...... மானும்**
**நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு**
**பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய**
**நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது ணர்த்தியருள் ...... வாயே**

அகரம் முதல் எழுத்தாக கூறப்படுகின்ற (வட மொழியிலுள்ள) ஐம்பத்தி ஒன்றுஅக்ஷரங்களும், உலகத்திலுள்ள எல்லாவிதமான கலைகளும், வகை வகையான தத்துவங்களும், வேதங்களும், தனக்குள் உட்பொருளாகக் கொண்டுள்ள ஒப்பற்ற பரம்பொருளை, தன்னைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் தன்னைக் கண்டு தானே ஆகிவிளங்கும் முக்தி நிலையை அடைந்து அதனை உணர்ந்து அனுபவிக்கும் பரமானந்தப் பொருளை, யோகியர் எந்த முடிவான பொருளை சமாதி நிலையில் தரிசிக்கிறார்களோ, தொடக்கம், இடைநிலை, இறுதி இவை ஏதும் இல்லாத தூய பரம்பொருளை, அணுவைக் காட்டிலும் சிறிய அணுவாக விளங்கும் பொருளை, ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய நான்கு கரணங்களும், ஸத்வம், ராஜதம், தாமஸம் என்ற முக்குணங்களும், நீங்கின ஒரு ஸத்தான வஸ்துவை, பிரளய காலத்தில் ஒன்றே ஆகி விஞ்சி நிற்கும் ஒன்றை நிறைந்தது, குறைந்தது, அகன்று போவது என்பது ஏதுமற்று நிறைந்த ஒன்றை எல்லா இடங்களிலும் பரவி இருக்கும் வஸ்துவை, இதற்கு சமம் இதுவே என்று ஒப்புவமை கூற முடியாததாய், வானில் உலவிக்கொண்டே இருந்த திரிபுரத்தை தன் புன் சிரிப்பினால் எரித்த சிவபெருமானும், (உன்னை நோக்கி) அரசனே, குருமூர்த்தியே, குமரனே, என்றெல்லாம் பக்தியுடனே போற்றித் துதித்தவுடன் அவருக்கு அருளிச் செய்த மௌன உபதேசமந்திரத்தை உன் பழைய அடிமையாகிய அடியேனுக்கும் புரியும்படி இனிமையாக உபதேசித்து அருள்வாயாக.

இந்த திருப்புகழில் முருகனின் இறைத்தன்மையை நிர்க்குண ரூபமாக வருணித்திருக்கிறார். இனி இறைவனை குணமற்றவனாகவும் தானும் இறைவனும் ஒன்றே என்ற அத்வைத அனுபவத்திற்கு வருவதற்கு முன் இறைவனை சகுண ரூபமாகக் காணுவதே சாதகனுக்கு உகந்ததாகும். இதனை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.



rajan.shantha@gmail.com




Having described the Narasimha Avatara (the Lord in half-lion form) exactly as it happened, Bhattathiri addressed Guruvayurappa as “Oh! Prahlada Priya” (the Lord who is dear to Prahlada). Suddenly, a voice came from somewhere which said: “I am not merely Prahlada-priya; I am all Bhakta Priya (dear to all devotees). Therefore, we would now have a glimpse of some Bhagavan’s Bhaktas who are dear to Him.

Among the many devotees of Lord Guruvayurappa, the one who occupies the prime position is of course Sri Narayana Bhattathiri. He was afflicted by a paralytic illness and all attempts made to cure the illness turned out in vain. He then decided to approach Lord Guruvayurappa with a prayer in the form of a composition. Having received guidance from Pundit, Sri Thunchathu Ezhuthachan about the nature, style and content of his work, he went to the Guruvayur temple, took a seat in a corner and initiated his divine venture.



According to the doctrine of Advaita, the Brahman alone is real, the one without a second. Brahman is the one reality which is reflected as the Self (Atman) within. He who transcends the adjuncts (Upadhis) like body, mind and Indriyas would realize Brahman shining within. (Aham Brahmasmi). Though Bhattathiri began with a prayer for a healthy body, gradually he has dispelled the wrong notion, “I am the body”. He said that the body would ultimately perish and what shines for ever is the Self (Atma) (Canto 93-9). We find that he has equated Krishna with Brahman, the Absolute Reality. In the concluding verse, he says: “Though the world of multiplicity is perceived, it is only the non-dual Self that is apprehended, just as gold only is seen and not the ornaments and just as the rope only seen in the darkness and not the snake” (Canto 98-7). In fact, the path of devotion and the path of Jnana are complimentary to each other as one leads to the other.

